# சேலம் மாநகராட்சி

## ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

### முன்னிலை : திரு .ரெ. சதீஷ், எம்.ஏ. எம்.பில்., அவர்கள்

## கட்டிட அனுமதி உத்திரவு

(சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272, 273, 279–ன்கீழ் பிறப்பிக்கப்பட்டது)

க.அ.எண்: இ–9 / 69 / 2018

க.வி.எண்: இ–9 / 83 / 2018

நாள்: 18.12.2018

பொருள்: கட்டிட அனுமதி – சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலம், நரசோதிப்பட்டி கிராமம், **S.No.12/1A, Ward-B, Block-13, TS No.28, 29** – புதியதாக கட்டிடம் கட்ட சேலம் மாநகராட்சி சட்டம் 1994 பிரிவு 272 ( 1), 273, 279–ன்படி மனை மற்றும் கட்டிட அனுமதி வழங்குதல் – உத்திரவு பிறப்பித்தல்– தொடர்பாக.

பார்வை:
1. திருமதி. S.தேன்மொழி, திரு. A.N.S.ஸ்ரீனிவாஸ் என்பவரின் விண்ணப்பம் நாள்:26.10.2018.
2. இரசீது எண்கள்

| | | | |
|---|---|---|---|
| பாதாள சாக்கடை திட்ட வைப்பு தொகை | – | – | – |
| கட்டிட அனுமதி கட்டணம் | ரூ.4700/– | 0009268 | 04.12.2018 |

3. இவ்வலுவலக திட்ட அனுமதி இ–9 / 69 / 2018, நாள் : 18.12.2018.

*******

உத்தரவு :–

சேலம் மாநகராட்சி, நரசோதிப்பட்டி கிராமம், **S.No.12/1A, Ward-B, Block-13, TS No. 28, 29** அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களின்படி குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கான புதியதாக கட்டிடம் கட்ட கீழ்குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி 18.12.2018–ந் தேதி முதல் 17.12.2020 முடிய இரண்டு வருட காலத்திற்கு திருமதி. S.தேன்மொழி, திரு. A.N.S.ஸ்ரீனிவாஸ் என்பவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

1) கட்டிடம் கட்டப்படும் இடத்தில் முன்புறமாக கட்டிட உரிமையாளர் பெயர், கட்டிட அனுமதி எண். அனுமதி பெற்ற தேதி அனுமதி காலம், அனுமதி நீடிப்பு காலம், கட்டிடம், கட்டப்படும் ஒப்பந்ததாரர் பெயர் ஆகிய விபரங்களை வெள்ளை நிற எழுத்தால் வைக்கப்பட்ட 2:1 அளவு கொண்ட கரும்பலகையை நன்கு தெரியும் வண்ணம் மாட்டி வைக்கப்படவேண்டும்

2) அங்கீகரிக்கப்பட்ட திருத்திய வரைபடம் சம்பந்தப்பட்ட மாநகராட்சி அலுவலர்களால் ஆய்வுக்கு காண்பிக்கும் வண்ணம் கட்டிட இடத்தில் வைத்திருக்க வேண்டும்.

3) கட்டிடத்தை அங்கீகரிக்க வரைபடங்களின்படி பூர்த்தி செய்த 15 தினங்களுக்குள் அல்லது பணி முடிவுற்ற 15 தினங்களுக்குள் சேலம் மாநகராட்சி 1994ம் வருடத்திய சட்டம் 129 ன் படி மாநகராட்சி ஆணையருக்கு சொத்து வரி விதிக்க கோரி உரிய படிவத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்துடன் விண்ணப்பிக்க வேண்டும்.

Scanned by CamScanner

4) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதல் செய்து கட்டப்படும் கட்டிட பாகங்களுக்கு / அனுமதியின்றி கட்டப்படும் கட்டிடங்களுக்கு சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 283–ன் படி அரையாண்டு ஒன்றுக்கு 9 சதுர மீட்டருக்கு ரூ.50/– அபராதம் வசூலிக்கப்படும்.

5) அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ளவாறுதான் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதலாகவும் விதிகளுக்கு முரணாகவும் கட்டும் கட்டிடத்திற்கு மின் இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கப்பட மாட்டாது.

6) அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்களுக்கு மாறுதல் அவசியம் எனில் அதற்காக திருத்திய வரைபடங்கள் அனுப்பி புது உத்திரவு பெற்ற பின்னரே கட்டிட வேலை ஆரம்பிக்க வேண்டும். இதை செய்ய தவறியவர்கள் மீது மாநகராட்சி சட்டம் 447–ன் படி குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படும் அல்லது தொகையையும் உம்மிடம் வசூல் செய்யப்படும்.

7) வழங்கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டபடி கட்டிட வேலை ஆறு மாத காலத்திற்குள் துவங்கப்படவேண்டும் அவ்வாறு துவங்கப்படாவிட்டால் மீண்டும் கட்டிட அனுமதியை உரிய தொகையை செலுத்தி புதுப்பித்துக்கொண்ட பின்னரே கட்டிட வேலை துவங்கப்படவேண்டும்.

8) ஏற்கனே உள்ள வீடுகள் மாற்றி கட்டுவதற்கு முன் மின் இணைப்புகள் இருப்பின் அதை அப்புறப்படுத்த வேண்டும்.

9) பொது சுகாதார சட்டம் பிரிவு 26,33–ன் படி மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து உத்திரவு பெறப்படாமல் புதியதாக கட்டப்பட்ட வீட்டில் குடிபுகக் கூடாது.

10) கட்டிட சம்பந்தப்பட்ட கல், மண் முதலியவற்றை சாலைகளில் போடக் கூடாது.

11) முனை இடத்தில் மீதமுள்ள காலியிடத்தில் நிழல் தரும் மரங்கள் நடப்பட வேண்டும்.

12) அங்கீகரிக்கப்பட்ட வடிவமைப்புபடி மழைநீர் சேகரிப்பு மனையில் செய்து முடிக்க வேண்டும்.

13) தவறான அல்லது மோசடியான ஆவணங்கள், தகவல்கள் (Misrepresentation or fraud) சமர்பித்து கட்டிட உரிமம் பெற்றுள்ளது தெரியவந்தால் சேலம் மாநகராட்சி சட்டம் பிரிவு 451(4)–ன் படி உரிமம் ரத்து செய்யப்பட்டு, மேல் நடவடிக்கை தொடரப்படும்.

14) கட்டிடத்தின் கூரையிலிருந்து மனையின் திறந்த வெளியிலிருந்தும் வரும் மழைநீரை சேமிக்கும் வகையில் தங்கள் மனைக்குள் மழைநீர் உறிஞ்சி குழிகள் அரசு பிரசுரங்களில் அறிவுறுத்தியுள்ள அளவுகளின் படி அமைக்க வேண்டும்.

15) புதிய கட்டிட விதிகளின்படி மருத்துவமனைகள், சமுதாய கூடங்கள், திருமண மண்டபங்கள் அனைத்து தங்கள் மனைகள் மற்றும் 150 ச.மீ பரப்புக்கு கூடுதலாக குடியிருப்புக்குக் கட்டிடங்களுக்கு சூரிய ஒளி சுடுநீர் அமைப்பு நிறுவவேண்டும்.

இணைப்பு:– ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடம் – 1
உண்மை நகல் –

– 2

பெறுதல்:

திருமதி. S.தேன்மொழி,
திரு. A.N.S.ஸ்ரீனிவாஸ்,
5/39A, சுப்ரமணியம் காலனி,
மெய்யனூர், சேலம்–636 004.

ஆணையருக்காக,
சேலம் மாநகராட்சி.
18.12.19

<u>நகல் :</u> இ.நி.பொ/உ.பொ. கட்டிடம் கட்டுவதை கண்காணித்து மேல் நடவடிக்கை எடுக்க
<u>நகல் :</u> உதவி ஆணையாளர் (வருவாய்)

CITY MUNICIPAL ... SCMC

Scanned by CamScanner

## சேலம் மாநகராட்சி

### ஆணையாளர், சேலம் மாநகராட்சி அவர்களின் நடவடிக்கைகள்

### முன்னிலை : திரு .ரெ. சதீஷ், எம்.ஏ. எம்.பில்., அவர்கள்

### திட்ட அனுமதி வழங்கல் உத்திரவு

ந.க. எண். இ–9 / 13651 / 2018 / திஅ.எண் இ–9 / 69 / 2018 நாள் : 18.12.2018

பொருள்: கட்டிட வரைபடம் – சேலம் மாநகராட்சி – சேலம் உள்ளூர் திட்ட குழுமத்திற்காக திட்ட அனுமதி புதியதாக கட்ட உத்தேசித்துள்ள குடியிருப்பு கட்டிட வரைபடத்திற்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

பார்வை: திருமதி. S.தேன்மொழி, திரு. A.N.S.ஸ்ரீனிவாஸ் என்பவரின் விண்ணப்பம் நாள்:26.10.2018.

ஆணை :-

பார்வையில் கண்டுள்ள கடிதங்களுடன் பெறப்பட்ட இணைப்புகள் மற்றும் வரைபடங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு சேலம் மாநகராட்சி, நரசோதிப்பட்டி கிராமம், S.No.12/1A, Ward-B, Block-13, TS No.28, 29 புதியதாக கட்ட உத்தேசித்துள்ள குடியிருப்பு உபயோக பயன்பாட்டிற்கான கட்டிட கட்டுமானத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 பிரிவு எண்.49 (1) (2) ன்படி கீழ்கண்ட நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

திட்ட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள் ந.க. எண்.இ–9 / 69 / 2018, நாள் : 18.12.2018

1. ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறுதலாக கட்டுமானம் கட்டக்கூடாது.
2. சேலம் மாநகராட்சியில் கட்டிட அனுமதி பெறப்பட்ட பின்னரே கட்டுமானப் பணி துவங்கப்படவேண்டும்.
3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனையில் இவ்வலுவலக முன் அனுமதியின்றி எவ்வித மாறுதலும் செய்யக் கூடாது.
4. நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 ன் பிரிவு எண்.50 ன் படி இந்த திட்ட அனுமதி 18.12.2018 முதல் 17.12.2021 முடிய உள்ள காலத்திற்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

18/12/2018

ஆணையருக்காக,
சேலம் மாநகராட்சி.

13.12.18

பெறுதல்:

திருமதி. S.தேன்மொழி,
திரு. A.N.S.ஸ்ரீனிவாஸ்,
5/39A, சுப்ரமணியம் காலனி,
மெய்யனூர், சேலம்–636 004.

SALEM CITY MUNICIPAL CORPORATION · SCMC

நகல் : சேலம் உள்ளூர் திட்ட குழுமத்தின் தகவலுக்காகவும் / நடவடிக்கைகாகவும்

Scanned by CamScanner